## பட்டுக்கோட்டையில் ரூ.20 கோடி மதிப்பில், புதிய பேருந்து நிலையம் திறப்பு:

# தமிழ்நாடு மேன்மேலும் முன்னேற்றமடைய ‘திராவிட மாடல்’ அரசு தொடர வேண்டும்!

## புதிய பேருந்து நிலையத்தைத் திறந்து வைத்து, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வாழ்த்துரை!

**தஞ்சை, பிப். 19-**

**தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை மற்றும் சுற்றுவட்டார பகுதி மக்களின் வசதிக்காக ரூ.20 கோடி மதிப்பில், பட்டுக்கோட்டையில் கட்டப்பட்டுள்ள புதிய பேருந்து நிலையத்தை துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்து, பேருந்து சேவைகளைக் கொடியசைத்து தொடங்கி வைத்து வாழ்த்திப் பேசினார்.**

**அப்போது அவர், ``தமிழ்நாடு மேன்மேலும் முன்னேற்றமடைய வேண்டும் என்றால், அதற்கு நம்முடைய முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசு தொடர வேண்டும்” என்று குறிப்பிட்டார்.**

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய வாழ்த்துரை வருமாறு:-

இன்று பட்டுக்கோட்டையில், 20 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள இந்தப் புதிய பேருந்து நிலையத்தை, உங்கள் முன்னிலையில் திறந்து வைப்பதில் உண்மையிலேயே மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். இந்தப் பட்டுக்கோட்டை நகராட்சி மிக நீண்ட பாரம்பரியம் கொண்ட ஒரு நகராட்சி.

**எதிர்கால வளர்ச்சி!**

இன்னும் சொல்லப்போனால், மிக வேகமாக வளர்ந்து வருகின்ற நகராட்சியாக இந்தப் பட்டுக்கோட்டை திகழ்ந்து கொண்டிருக்கிறது. ஆனால், இந்த நகரத்தின் வளர்ச்சிக்கு ஈடுகொடுக்கின்ற வகையில் ஒரு பேருந்து நிலையம் இருந்ததா என்று கேட்டால் இல்லை. பேருந்துகள் நிறுத்தும் இடம் மிக நெருக்கடியான இடமாக இருந்தது. நம்முடைய திராவிட மாடல் அரசு அமைந்த பிறகு, பட்டுக்கோட்டையின் வளர்ச்சிக்காக இன்று பல்வேறு திட்டங்களைச் செய்து வருகிறோம். அதற்கு ஒரு உதாரணம்தான், இன்று திறந்து வைக்கப்பட்டிருக்கக்கூடிய இந்தப் பேருந்து நிலையம். பட்டுக்கோட்டை யின் எதிர்கால வளர்ச்சியை மனதில்கொண்டு, இந்தப் பேருந்து நிலையத்தைத் தாராளமான இடவசதியோடு, அதிநவீனமான கட்டுப்பாட்டு வசதிகளோடு கட்டியிருக்கிறோம்.

நம் முதலமைச்சர், திராவிட மாடல் அரசைப் பொறுத்தவரை, `எல்லா ஊருக்கும் எல்லாம்’ என்று அனைத்து ஊர்களிலும் வளர்ச்சிப் பணிகளைத் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறோம். அந்த வகையில், இந்த நகராட்சி முழுக்க சுமார் 35 கிலோமீட்டர் நீளத்திற்குத் தார்ச் சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த நகராட்சியில் உள்ள குளங்கள் ஏழரை கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்டுள்ளன.

**புதிய சந்தை, புதிய பூங்கா!**

புதிய சந்தை, புதிய பூங்காக்களும் அமைக்கப்பட்டுள்ளன. 5 கோடி ரூபாய் செலவில் திடக்கழிவு மேலாண்மைப் பணிகள், 22 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம், 4.5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பள்ளிகளுக்குப் புதிய வகுப்பறைகள், கழிப்பறைகள் எல்லாம் கட்டப்பட்டுள்ளன. 1.5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நூலகம் கொண்டிருக்கக்கூடிய புதிய அறிவுசார் மையம் என இந்தப் பட்டுக்கோட்டை நகராட்சியின் வளர்ச்சிக்காக நம்முடைய திராவிட மாடல் அரசு இன்று பல்வேறு பணிகளைச் செய்துள்ளது.

இந்த மாதிரியான உள்கட்டமைப்புத் திட்டங்கள் ஒரு புறமும், மறுபுறம் பொதுமக்களுடைய நலனுக்காகப் பல்வேறு திட்டங்களை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் செய்து வருகிறார். ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் நம்முடைய முதலமைச்சர் இட்ட முதல் கையெழுத்து மகளிர்க்கான விடியல் பயணத் திட்டக் கையெழுத்து. அதுபோல தஞ்சை மாவட்டத்தில் இன்று இந்த விடியல் பயணத்



திட்டத்தின் மூலமாக 30 கோடி பயணங்களை மகளிர் மேற்கொண்டி ருக்கிறீர்கள்.

**காலை உணவுத் திட்டம்!**

பள்ளிக் குழந்தைகளுக்குக் காலை உணவுத் திட்டம். தஞ்சை மாவட்டத்தில் மட்டும் ஒவ்வொரு நாளும் திங்கள் முதல் வெள்ளிக்கிழமை வரை 60,000 குழந்தைகள் முதலமைச்சர் காலை உணவுத் திட்டத்தில் பயன்பெறுகிறார்கள்.

அதே போல் கல்லூரி மாணவர்களுக்குப் புதுமைப் பெண் திட்டம், தமிழ்ப் புதல்வன் திட்டம் மூலம் தஞ்சை மாவட்டத்தில் 32,000 மாணவ, மாணவிகள் பயன்பெற்றிருக்கி றார்கள். அதேபோல் இன்று சமீபத்தில் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் 10 லட்சம் மாணவர்களுக்கு மடிக்கணினி திட்டத்தையும் அறிமுகப்படுத்தி அதைச் செயல்படுத்தி வருகிறார். தஞ்சாவூர் மாவட்டத்தில் மட்டும் 35,000 மாணவர்க ளுக்கு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் மடிக்கணினி வசதி திட்டத்தைக் கொடுத்திருக்கிறார்.

**கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டம்!**

இவை அனைத்தையும் விட மிக மிக முக்கியமான ஒரு திட்டம், இங்கே இவ்வளவு மகளிர் வந்திருக்கிறீர்கள், உங்களுடைய ஒவ்வொருவருடைய முகத்திலும் மகிழ்ச்சி தெரிகிறது. இந்தியாவையே திரும்பிப் பார்க்க வைத்த ஒரு திட்டம், அதுதான் கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டம். ஆட்சிப் பொறுப்பேற்கும்போது நம்முடைய தேர்தல் வாக்குறுதியில் கொடுத்திருந்தோம். 2023ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் இந்தத் திட்டத்தைத் தொடங்கி வைத்தார் நம்முடைய தலைவர் அவர்கள். ஒவ்வொரு மாதமும் மகளிருக்கு 1,000 ரூபாய் உரிமைத் தொகை வழங்கப்படும் என இன்று ஒரு கோடியே 31 லட்சம் மகளிருக்கு அந்தத் திட்டத்தை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிறார்.

அதுமட்டுமல்லாமல், இந்த மாதம் பிப்ரவரி, மார்ச், ஏப்ரல் என மூன்று மாதங்களுக்குச் சேர்த்து 3,000 ரூபாய், அதோடு சேர்த்து கோடைக்கால சிறப்புத் திட்டம் என 2,000 ரூபாய் சேர்த்து மொத்தம் 5,000 ரூபாயை இன்று நம்முடைய முதலமைச்சர் அவர்கள் மகளிருக்குக் கொடுத்திருக்கிறார்.

**திராவிட மாடல் அரசு!**

இன்று இந்தத் திட்டத்திற்கு முட்டுக்கட்டை போடப் பலர் திட்டமிட்டார்கள். இந்தச் சூழ்ச்சிகளையெல்லாம் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தகர்த்தெறிந்து இன்று 5,000 ரூபாயை மகளிருக்குக் கொடுத்திருக்கிறார். இப்படி மக்கள் நலத் திட்டங்களாக இருந்தாலும் சரி, பேருந்து நிலையம் போன்ற உள்கட்டமைப்புப் பணிகளைச் செய்வதாக இருந்தாலும் சரி, நம்முடைய ‘திராவிட மாடல்’ அரசு தொடர்ந்து முக்கியத்துவம் கொடுத்து வருகிறது.

இன்று புதிதாகக் கட்டப்பட்டுள்ள இந்தப் பேருந்து நிலையத்தைப் பட்டுக்கோட்டை மற்றும் சுற்றியுள்ள கிராம மக்கள் நல்லமுறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று உங்களையெல்லாம் கேட்டுக் கொள்கிறேன். மிக முக்கியமாக, தூய்மையாகப் பராமரிக்க நகராட்சிக்கு நீங்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். இனி இந்த மாதிரியான வளர்ச்சிப் பணிகள் தொடர வேண்டும. தமிழ்நாடு மேன்மேலும் முன்னேற்றமடைய வேண்டும் என்றால் அதற்கு நம்முடைய முதலமைச்சர் தலைமையிலான ‘திராவிட மாடல்’ அரசு தொடர வேண்டும்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் எழுச்சிமிக்க உரையாற்றினார்.

**பங்கேற்றவர்கள்!**

அமைச்சர்கள் கே.என்.நேரு, கோவி. செழியன், அன்பில்மகேஷ்பொய்யாமொழி, மெய்யநாதன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் எஸ்.கல்யாணசுந்தரம், ச.முரசொலி, தாட்கோ தலைவரும், கழக இளைஞர் அணி மாநில துணைச் செயலாளருமான இளையராஜா, தமிழ்நாடு அரசின் டெல்லி சிறப்புப் பிரதிநிதி ஏ.கே.எஸ். விஜயன், சட்டமன்ற உறுப்பினர்கள் துரை. சந்திரசேகரன், அண்ணாதுரை, அசோக்குமார், நீலமேகம், மாநகர மேயர் சண்.ராமநாதன், மாவட்ட ஆட்சித் தலைவர் பிரியங்கா பங்கஜம் ஐ.ஏ.எஸ்., நகராட்சித் தலைவர் சண்முகப்பிரியா செந்தில்குமார், மாவட்டச் செயலாளர் பழனிவேல், மாவட்ட வருவாய் அலுவலர் தியாகராஜன், நகராட்சி மண்டல இணை இயக்குநர் தாணுமூர்த்தி, நகராட்சி ஆணையர் கனிராஜ் உள்பட அரசு அலுவலர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

---

## தமிழ்நாட்டிற்குத் துரோகமிழைக்கும் பா.ஜ.க. – அ.தி.மு.க. வஞ்சகக் கூட்டணியை எதிர்த்து –

# மக்களின் பேராதரவுடன் - ‘தமிழ்நாடு தலைகுனியாது’ - 100 தொகுதிகளை நெருங்கும் எழுச்சிமிகு பரப்புரைக் கூட்டங்கள்!
















**கழகத் தலைவர், முதலமைச்சர் அவர்கள் அறிவித்த படி, தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தலை முன்னிட்டு திராவிடமாடல் அரசின் சாதனைகளை விளக்கும் வகையிலும், ஒன்றிய பா.ஜ.க. அரசு மற்றும் அதன் அடிமைக் கூட்டணி தமிழ்நாட்டிற்கு இழைத்துவரும் துரோகத்தை எடுத்துரைக்கும் வகையிலும் தமிழ்நாட்டின் 234 சட்டமன்றத் தொகுதிகளிலும் தமிழ்நாடு தலைகுனியாது பரப்புரையானது திராவிட முன்னேற்ற கழகத்தின் சார்பில் மிகுந்த எழுச்சியோடு நடைபெற்று வருகிறது.**

2026 சட்டமன்ற தேர்தலில் தி.மு.க.வின் வெற்றியை இப்போதே உறுதிசெய்யும் விதமாக தமிழ்நாடு தலைகுனியாது பொதுக்கூட்டங்கள் நடந்து கொண்டிருக்கின்றன.

24 கழக நட்சத்திரப் பேச்சாளர்களைக் களம் இறக்கி , கடந்த பிப்ரவரி 1 ஆம் தேதி முதல் தொடங்கப்பட்ட பரப்புரை 15.02.2026 அன்றோடு 97 சட்டமன்றத் தொகுதிகளில் நடைபெற்று முடிந்துள்ளது. விரைவில் சதத்தை எட்ட இருக்கிறது தமிழ்நாடு தலைகுனியாது பரப்புரைக் கூட்டம்.

இந்த 97 சட்டமன்ற தொகுதிகளில் நடைபெற்று முடிந்த பரப்புரையில் பேச்சாளர்களாக 6 சட்டமன்ற உறுப்பினர்கள், 7 நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் 9000+ க்கும் மேற்பட்ட தொகுதிகளின் முக்கிய பிரபலங்கள், 1,78,000 க்கும் மேற்பட்ட பொது மக்கள் இதுவரை கலந்து கொண்டது வரலாற்றுச் சிறப்பு மிக்க நிகழ்வாகும்.

தமிழ்நாட்டின் அரசியல் வரலாற்றில் இல்லாத வகையில் இக்குறுகிய நாட்களில் சுமார் 100 சட்டமன்ற தொகுதிகளில் முக்கிய பிரபலங்கள் சந்திப்புடன் கூடிய பரப்புரை கூட்டமானது சிறப்பாக நடைபெற்றுள்ளது.

97 சட்டமன்றத் தொகுதிகளிலும் சிறப்பான ஏற்பாடுகள் செய்யப்பட்டு, ஒரு கட்டுக்கோப்பான கூட்ட நிகழ்வாக நடைபெற்றது பரப்புரைக் கூட்டம். அனைத்து சட்டமன்ற தொகுதிகளிலும் மக்கள் திரண்டு வந்து கலந்து கொண்டனர். திராவிட மாடல் அரசு மீது மக்கள் வைத்திருக்கும் நம்பிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே இருந்ததை கண்கூடாகக் காண முடிந்தது.

திராவிட மாடல் அரசின் சாதனைத் திட்டங்களான கலைஞர் மகளிர் உரிமைத் தொகை, விடியல் பயணம், புதுமை பெண், நான் முதல்வன், காலை உணவு திட்டம், தாயுமானவர் திட்டம், அன்புக் கரங்கள் திட்டம் என அத்தனை திட்டங்களும் மக்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளன. பொங்கல் பரிசாக 3000 அறிவித்தது, சட்டமன்ற தேர்தலால் உரிமை தொகை தடைபட்டு விடக் கூடாது என 5000 ரூபாய் மொத்தமாக கொடுத்தது, அடுத்து அமையவிருக்கும் திராவிட மாடல் 2. 0 ஆட்சியில் கலைஞர் மகளிர் உரிமை தொகை 2000 ரூபாயாக உயர்த்தப்படும் என மாண்புமிகு முதலமைச்சர் உறுதி அளித்திருப்பது என அடுத்தடுத்த அறிவிப்புகளால் பொது மக்களுக்கு இன்ப அதிர்ச்சியும், எதிர்க்கட்சியினருக்கு அதிர்ச்சி வைத்தியமும் கொடுத்துள்ளார் முதலமைச்சர் அவர்கள். இவற்றை எல்லாம் பரப்புரைக் கூட்டங்களில் கழக சிறப்பு பேச்சாளர்கள் எடுத்துக்கூறி பேசும் போது பொது மக்கள் ஆரவாரத்துடன் தங்களின் ஆதரவை வெளிப்படுத்தினர்.

அதோடு பல்வேறு கவனம் ஈர்க்கும் பிரசாரங்களும் முன்னெடுக்கப்பட்டன.

அதில் முக்கியமாக பட்ஜெட்டில் தமிழ்நாட்டிற்கு எதுவும் வழங்காத ஒன்றிய பா.ஜ.க. அரசையும் அதற்கு துணை போய் துரோகம் செய்யும் அ.தி.மு.க.வையும் , மக்கள் முன் எடுத்துரைக்கும் வகையில், பொது மக்களுக்கு ‘அல்வா’, ‘முட்டை’ கொடுத்து பிரச்சாரம் செய்தது பொது மக்களின் மத்தியில் கவனம் பெற்றது.

வரவிருக்கும் சட்டப்பேரவைத் தேர்தலை முன்னிட்டு கழகத்தின் புதிய பிரச்சாரப் பாடல் வெளியிடப்பட்டது. இந்த பாடல் பிரச்சாரக் கூட்டங்களில் இசைக்கப்படும் போது கூட்டம் ஆர்ப்பரித்து கொண்டாடியது. ரிங் டோனாகவும், ரீல்ஸ் ஆகவும் நிறைய இளைஞர்கள், பெண்கள் கழகப் பிரச்சார பாடலை வைத்து சமூக வலைதளங்களில் பதிவிட்டு ஆதரவு தெரிவித்து வருகின்றனர்.

பரப்புரை நடைபெறும் ஒவ்வொரு தொகுதியிலும் பேரறிஞர் அண்ணா, தந்தை பெரியார், முத்தமிழறிஞர் கலைஞர் உள்ளிட்ட முக்கிய தலைவர்களின் சிலைகளுக்கு நட்சத்திரப் பேச்சாளர்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். கழகத்தின் மூத்த முன்னோடியினர் வீடுகளில் அவர்களை சந்தித்து நலம் விசாரித்து அவர்களுடன் உணவருந்தியும், பாராட்டியும் சிறப்பிக்கப்பட்டனர் . இது கழகத்தினர் மத்தியில் நெகிழ்ச்சியை உண்டாக்கி தலைமை மீதான பிடிப்பை அதிகரிக்கச்செய்துள்ளது.

காலையில் அடிமட்ட அளவிலான களப்பணி, முக்கிய பிரபலங்களுடனான சந்திப்பு, மாலையில் பரப்புரைக் கூட்டம் என சிறப்பாக திட்டமிடப்பட்டுள்ள தமிழ்நாடு தலைகுனியாது பரப்புரையானது பொது மக்கள் மற்றும் கழகத்தினரிடையே மிகுந்த வரவேற்பை பெற்றுள்ளது.

97 தொகுதிகளிலும் மக்கள் அணி அணியாய் திரண்டு வந்து எழுச்சியோடு பங்கேற்றனர். பெண்கள் , இளைஞர்கள் அதிகளவு திரண்டு வந்து ஆதரவு தெரிவித்து வருகின்றனர். பரப்புரை தொடங்கிய போது இருந்த ஆதரவை விட இரண்டு மடங்கு ஆதரவு அதிகரித்துள்ளது. ஒன்றிய பா.ஜ.க. அரசின் வஞ்சகத்தை எதிர்த்து தமிழ்நாட்டின் உரிமைகளை காக்கும் ஒரே தலைவராக முதலமைச்சர் அவர்கள் மட்டுமே உள்ளார், அவரால் மடடுமே நலத்திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்தி தமிழ்நாட்டை வளர்ச்சி பாதையில் அழைத்து செல்ல முடியும் என மக்கள் திடமாக நம்புகிறார்கள். பொது மக்களின் நம்பிக்கையைக் காப்பாற்றும் அரசாக என்றும் இருக்கும் திராவிட மாடல் அரசு.